# தாய்மொழி - தமிழ்

## தரம் - 1



# ஆசிரியர் வழிகாட்டி

## இரண்டாந்தவணை

(2026 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்துவதற்கானது)


முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித்துறை

மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்

தேசிய கல்வி நிறுவகம்

இலங்கை

www.nie.ac.lk

# தாய்மொழி - தமிழ்

## ஆசிரியர் வழிகாட்டி

(2026 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்துவதற்கானது.)

# தரம் 1

# இரண்டாந்தவணை

**முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித்துறை**
**மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்**
**தேசிய கல்வி நிறுவகம்**
**இலங்கை**
**www.nie.ac.lk**

தாய்மொழி தமிழ் - ஆசிரியர் வழிகாட்டி

இரண்டாந்தவணை

தரம் - 1

© முழுப்பதிப்புரிமையுடையது

முதற் பதிப்பு : 2025

© தேசிய கல்வி நிறுவகம்

வெளியீடு : தேசிய கல்வி நிறுவகம்

ISBN:

முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித்துறை
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை

இணையத்தளம் : www.nie.ac.lk
மின்னஞ்சல் : info@nie.edu.lk

**ஆலோசனை**

**பேராசிரியர். மஞ்சுளா வித்தாண பத்திரன (கலாநிதி)**
பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்.

**கலாநிதி தர்சன சமரவீர**
பிரதிப் பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்
தேசிய கல்வி நிறுவகம்.

**பணிப்பு**

**ஆர்.எம். குமுதுமலீ த சில்வா**
பணிப்பாளர், முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித்துறை,
தேசிய கல்வி நிறுவகம்.

**பாட இணைப்பாக்கம்**

**நிர்மலா ஜயசிங்க**
சிரேஷ்ட விரிவுரையாளர், முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித்துறை,
தேசிய கல்வி நிறுவகம்.

**கலைத்திட்டக்குழு**

**நிர்மலா ஜயசிங்க**
சிரேஷ்ட முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித்துறை,
தேசிய கல்வி நிறுவகம்.

**வெளிவாரி வளப் பங்களிப்பு**

**வி.என்.எஸ்.உதயசந்திரன்**
பணிப்பாளர் (ஓய்வு) தமிழ்மொழித்துறை
தேசிய கல்வி நிறுவகம்.

**செம்மையாக்கம்**

**எஸ். மனோகரன்**
சிரேஷ்ட விரிவுரையாளர் (ஓய்வு)
மகாவலி தேசிய கல்வியியற் கல்லூரி.

**மொழிச் செம்மையாக்கம்**

**எம். எச். எம். யாகூத்**
பிரதம செயற்றிட்ட அதிகாரி (ஓய்வு)
தேசிய கல்வி நிறுவகம்.

**படங்கள்**

**எஸ். பி. முரளி**
ஆசிரியர் ஆலோசகர்

**கணினி வடிவமைப்பு**

ந. துஷாந்தன்
தேசிய கல்வி நிறுவகம்.

# அறிமுகம்

மொழிக்கற்றலானது கடினமானதொரு செயன்முறையாகும். ஆயினும் அது மாணவர்களிடம் அநாவசியமான உளத்தாக்கங்களையும் சுமையையும் ஏற்படுத்தாதவாறு கற்பிப்பது மிகவும் முக்கியமானதாகும். விசேடமாக நீங்கள் தாய்மொழியின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் மீண்டும் மீண்டும் கற்பதோடு அவற்றை தாய்மொழிக்குரித்தான செயலடைவுக் தரங்கள் ஊடாகவும் குறித்த பருவத்தினருக்குரித்தான விடய உள்ளடக்கங்கள் ஊடாகவும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். முதலாம் தரத்தில் தாய்மொழிக்குரித்தான அநேகமான பாட உள்ளடக்கங்களுக்காக இலக்கியங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. கற்பித்தல் நுட்ப முறைக்காகவும் இலக்கியப் பிரவேசம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதற்கிணங்க மாணவர்களுக்கு மகிழ்ச்சிகரமானதும் இலகுவானதும் விருப்பத்துடனும் கூடிய தாய்மொழிக்குரித்தான கற்றல் கற்பித்தல் செயன்முறைகளைத் தயார் செய்து கொள்வதற்கு அவசியமான ஈடுபடுத்தலும் முன்வைக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தையும் பற்றிய தெளிவான விளக்கத்துடன் இரண்டாம் தவணைக்கான கற்றல் கற்பித்தல் செயன்முறைகளில் ஈடுபடுதல் முக்கியமானதாகும்.

தரம் ஒன்றின் முதலாம் தவணையில் விதந்துரைக்கப்பட்ட கேட்டல் பிரித்தறிகை, பார்வைப் பிரித்தறிகை, உளவியக்கத் திறன்கள், முன்வாசித்தல் திறன்கள் மற்றும் முன் எழுத்துத் திறன்கள் ஆகிய முன்மொழித் திறன்களுக்கான ஐந்து கற்றல் பேறுகள் ஊடாக தரம் ஒன்றில் மாணவர்களுக்கு தாய்மொழிக் கற்றலுக்கான அடிப்படைகள் வழங்கப்பட்டன. இத்தகைய திறன்களைப் பூரணப்படுத்தியதன் பின்னர் இலகுவான அறிவுறுத்தல்களைச் செவிமடுத்து துலங்குதல் இலகுவான செய்திகளைச் செவிமடுத்து மற்றொருவருக்குச் சரியாகக் கூறுதல், இலகுவான அறிவித்தல்களைச் செவிமடுத்து அதனூடாக வினவப்படும் வினாக்களுக்கு வாய் மொழியாக விடையளித்தல் கேட்ட சம்பவம் அல்லது பார்த்த சம்பவம் பற்றி ஆரம்பம், இடை, முடிவு என தொடர்புபடுத்திக் கூறுதல் போன்ற திறன்களை விருத்தி செய்வதில் ஈடுபடுத்தியதனூடாக மொழியின் சமூகப் பணி தொடர்பான அடிப்படைகள் வழங்கப்பட்டன. அவ்வாறே தரம் ஒன்றின் முதலாவது தவணையில் வாசிக்கும் போதும் எழுதும் போதும் முதல் எழுத்தக்களைச் சரியாக பயன்படுத்தும் திறன்களுக்கு அவசியமான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டதோடு வாசித்தல் மற்றும் எழுதுதலுக்கான பொறிமுறை நுட்பத்திறன் விருத்திக்கான அடித்தளமும் இடப்பட்டது.

இந்த திறன்களைப் பூரணப்படுத்தியதன் பின்னர் இரண்டாவது தவணைக்காக மாணவர்கள் பூரண ஆயத்தத்துடன் இருப்பார்கள் என எதிர்பார்ப்பதோடு அவற்றினூடாகப் பெற்றுக் கொண்ட ஆற்றல்கள் இரண்டாவது தவணைக்காக விதந்துரைக்கப்பட்ட கற்றல் பேறுகளை அடையச் செய்வதற்கு மிகவம் உந்துசக்தியாக அமையும் என எதிர்பார்க்கின்றோம். கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கு முன்னதாக ஆசிரியர் வழிகாட்டியில் உள்ளடக்கப்பட்டுள்ள கற்றல் கற்பித்தல் செயன்முறைஇ கணிப்பீட்டுச் செயன்முறை தொடர்பான பூரண விளக்கத்துடன் செயலாற்றி இரண்டாம் தவணைக்கென விதந்துரைக்கப்பட்டுள்ள கற்றல் பேறுகளை மாணவர்களிடத்தே அடையச் செய்வீர்கள் என எதிர்பார்க்கின்றோம்.

**நிர்மலா ஜயசிங்க**
சிரேஷ்ட விரிவுரையாளர்
முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை

## தரம் - 1 இல் இரண்டாந் தவணைக்காக விதந்துரைக்கப்பட்ட கற்றல் பேறுகள்

- **குறும் வீடியோ காட்சியொன்றைப் பார்த்து அதன் உள்ளடக்கங்களைக் குறிப்பிடுவார். ஏனையோருடன் நட்புறவுடன் உரையாடுவார்.**
- **படமொன்றை அவதானித்து அதனூடாக வினவப்படும் வினாக்களுக்கு வாய்மொழியில் விடை கூறுவார்.**
- **இலகுவான சிறுவர் பாடலொன்றைச் செவிமடுத்து அதனூடாகக் வினவப்படும் வினா க்களுக்கு விடை கூறுவார்.**
- **இலகுவான பந்தியொன்றைச் செவிமடுத்து அதனூடாகக் வினவப்படும் வினாக்களுக்கு விடை கூறுவார்.**
- வாசிக்கும் பொழுதும் எழுதும் பொழுது நடு, நடுக் கீழ்(உயிர் மெய்) எழுத்துக்களை சரியாகப் பயன்படுத்துவார்.
- **வாசிக்கும் போதும் எழுதும் போதும் உயிர் மெய் எழுத்துக்களை சரியாகப் பயன்படுத் துவார்.**
- வாசித்தல் எழுதுதல் ஆகியவற்றில் மெய்யெழுத்துக்களை சரியாக பயன்படுத்துவார்.
- **பந்தி,கதை, மற்றும் உரையாடல்களை உரத்து உச்சரித்த வாசிப்பார்.**

மொழிப் பயன்பாட்டில் செவிமடுத்தலும் பேசுதலும் மிக முக்கியமானவை. செவிமடுத்தலுக் காகவும் பேசுதலுக்காகவும் நடத்தத்தக்க செயற்பாடுகளுள் வீடியோ காட்சியொன்றினைப் பார்த்தும் கேட்டும், அதன் உள்ளடக்கம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கவும் அது குறித்து ஏனையோருடன் நட்புடன் உரையாடவும் சந்தர்ப்பம் வழங்குவதன் மூலமும் மொழியைப் பயன்படுத்தும் திறனை விருத்தி செய்து கொள்ள வாய்ப்பளிக்க முடியும்.

சித்திரமொன்றினை அவதானித்து அதனை விளங்கி, அதனைத் தழுவி வினவப்படும் வினாக்களுக்கு வாய்மொழி மூலம் விடையளிக்கச் செய்தல், சிறுவர் பாடலென்றைச் செவிமடுத்து விளங்கி, அதனைத் தழுவி வினவப்படும் வினாக்களக்க வாய்மொழி மூலம் விடையளிக்கச் செய்தல், எளிமையான பந்தி ஒன்றினைச் செவிமடுக்கச் சந்தர்ப்பமளித்து அதனைத் தழுவி வினவப்படும் வினாக்களுக்கு வாய்மொழி மூலம் விடையளிக்கச் செய்தல், எளிமையான பந்தியொன்றினைச் செவிமடுக்கச் சந்தர்ப்பமளித்து அதனைத் தழுவி வினவப்படும் வினாக்களுக்கு வாய்மொழி மூலம் விடையளிக்கச் செய்தல் போன்றவற்றின் மூலம் மொழிப் பயன்பாட்டின் நடைமுறைப் பெறுமானத்தை உணர்த்தலாம்.

யாதேனுமொன்றைக் கவனமாகவும் தன்னடக்கத்துடனும் செவிமடுப்பதால் விளக்கம் அதிகரிப்பதற்கும் சொற்களஞ்சிய விருத்திக்கும் சந்தர்ப்பம் கிட்டும். சொற்களஞ்சிய விருத்தி, பேச்சுத்திறன் விருத்திக்குப் பெரிதும் துணையாக அமையும்.

அதற்மைய இங்கு தரப்பட்டுள்ள செயற்பாடுகளைச் சீராகச் செய்வதன் மூலம் மாணவரின் மொழி விருத்திக்கான சந்தர்ப்பங்களை உருவாக்கலாம்

பாடதிட்ட உள்ளடக்கம்

## குறும் வீடியோ காட்சி

| மொழியின் சமூகப் பணி, சாத்திரியப் பணி | கற்றற்பேறு | விடய உள்ளடக்கம் | சிறப்பான மொழித் திறன்கள் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதி |
|---|---|---|---|---|---|
| SLF/ALF | 10. குறும் வீடியோ காட்சியொன்றினைப் பார்த்து அதன் உள்ளடக்கத்தைக் கூறுவார். | “பிராணிகளின் உலகம்” எனும் தலைப்பில் தயாரிக்கப்பட்ட ஏறத்தாழ மூன்று நிமிட நேர வீடியோக் காட்சி<br>▪ வீடியோக் காட்சியில் அடங்கியுள்ளவற்றை விவரிப்பதற்குத் தேவையான சொற்கள்<br>▪ பேச்சு மொழியில் நிகழ்கால வினைச் சொற்கள்<br>▪ பேச்சு மொழியில் எளிய வாக்கியங்கள்<br>▪ தன்னடக்கம்<br>▪ சொற்களின் சரியான உச்சரிப்பு | ▪ செவி மடுத்தல்<br>▪ பார்த்தல்<br>▪ பேசுதல் | 10.1 ஏறத்தாழ மூன்று நிமிட நேர வீடியோக் காட்சியொன்றினைக் கவனமாகப் பார்த்துக் கேட்டும், அதில் அடங்கியுள்ள மூன்றுக்குக் குறையாத பொருள்களைப் பாத்திரங்களில் பெயரிடுவார். | 10.1.1 பொருள்கள் அல்லது பாத்திரங்களைச் சரியாகப் பெயரிடுவார். |
| | | | | 10.2 ஏறத்தாழ மூன்று நிமிட நேர வீடியோக் காட்சியொன்றினைக் கவனமாகப் பார்த்து அதில் அடங்கியுள்ள ஒரு சம்பவத்தைக் கூறுவார். | ▪ சம்பவத்தைச் சரியாகப் பெயரிடுவார். |

**செயற்பாடு 10.1,10.2** : **வீடியோக் காட்சியொன்று பார்ப்போம்" பாத்திரங்கள், பொருள்கள், சம்பவங்களைக் கூறுவோம்**

**காலம்** : ஒரு மணித்தியாலம்

**கற்றல் வளங்கள்** : வீடியோக் காட்சி (3 நிமிடங்கள்)

**சொற்களஞ்சியம்** : பாத்திரம், பொருள், சம்பவம்

**கற்றல் கற்பித்தற் செயன்முறை** :

**படிமுறை : 01**

- பிராணிகளின் நடத்தைகளை உள்ளடக்கிய ஒரு வீடியோக் காட்சியை சில தடவை பார்க்க செவிமடுக்க மாணவர்க்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- கவனமாகவும் தன்னடக்கத்துடனும் வீடியோக் காட்சியைப் பார்க்குமாறு மாணவருக்கு அறிவுறுத்தல் வழங்குங்கள்.
- கவனமாகவும் தன்னடக்கத்துடனும் பார்ப்பதன் முக்கியத்துவம் அதன் மூலம் கிடைக்கும் பயன்கள் ஆகியன பற்றி மாணவர்க்கு எளிமையாக விளக்கமளியுங்கள்.

**படிமுறை : 02**

- தாம் பார்த்த வீடியோக் காட்சியில் அடங்கியிருந்த பாத்திரங்களை பொருள்களைப் பெயரிட மாணவர்க்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- அவை தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுங்கள்.

**படிமுறை : 03**

- வீடியோக் காட்சியில் அடங்கியிருந்த சம்பவங்கள் நிகழ்வுகள் யாவை என மாணவரிடம் வினவுங்கள்.
- அவை தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுங்கள்.

**கணிப்பீடு :**

| செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதி | பாண்டித்தியம் அடைந்துள்ளார். | | பாண்டித்தியத்திற்குத் தொலைவில் உள்ளார். | |
|---|---|---|---|---|---|
| | | 4 | 3 | 2 | 1 |
| 10.1 மூன்று நிமிடத்துக்கு வீடியோக் காட்சியொன்றைப் பார்ப்போம்" பத்திரங்கள் பொருள்கள் சம்பவங்களைக் கூறுவோம். | 10.1 சரியானதாக இருத்தல் | பத்திரங்கள் பொருள்கள் மூன்றுக்குக் கூடுதலாக சரியாகப் பெயரிடுவார். | பத்திரங்கள் பொருள்கள் மூன்றைச் சரியாகப் பெயரிடுவார். | பத்திரங்கள் பொருள்கள் இரண்டை/ ஒன்றை சரியாகப் பெயரிடுவார். | ஏனையோரின் உதவியுடன் பாத்திரங்கள் பொருள்கள் ஒன்றையேனும் சரியாகப் பெயரிடுவார். |
| 10.2 மூன்று நிமிடத்துக்கு வீடியோக் காட்சி யொன்றைப் பார்ப்போம் பத்திரங்கள் பொருள்கள் சம்பவங்களைக் கூறுவோம். | 10.2 சரியானதாக இருத்தல் | சம்பவத்தை நிகழ்வை மிகச் சரியாகப் பெயரிடுவார் | சிறியதொரு குறைபாட்டுடன் சம்பவத்தை நிகழ்வை சரியாகக் கூறுவார். | குறைபாடுகளுடன் சம்பவத்தை, நிகழ்வைச் சரியாகப் கூறுவார். | ஏனையோரின் உதவியுடன் சம்ப வத்தை நிகழ்வை கூறுவார். |

**பாடதிட்ட உள்ளடக்கம்**

**நட்பு ரீதியாக உரையாடல்**

| மொழியின் சமூகப் பணி, சாத்திரியப் பணி | கற்றற்பேறு | உள்ளடக்கம் | சிறப்பான மொழித் திறன்கள் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதி |
|---|---|---|---|---|---|
| SLF | 11 ஏனையோருடன் நட்புடன் உரை யாடுவார். | “எமது வீடு” எனும் கருப்பொருளைத் தழுவி வீட்டு வேலைகள் தொடர்பாக பாடசாலையில் செய்யும் வேலைகள் தொடர்பான ஏறத்தாழ மூன்று நிமிட நேர உரையாடல்<br>■ நட்பு விருத்திக்குப் பொருத்தமான சொற்கள் (நன்றி, தயவு செய்து, மன்னியுங்கள் ...)<br>■ நண்பரின் பெயர் கூறி விழித்தல்<br>■ பேச்சு மொழி வாக்கியங்கள்<br>■ உயிர்ப்பான செவிமடுத்தல் | ■ செவிமடு-த்தல்<br>■ பேசுதல் | 11.1 ஏனையோருடன் நட்புடன் உரையாடும் போது மரியாதையை வெளிப்படுத்தும் மூன்று சொற்களைக் கூறுவார். | 11.1.1 சொற்களை சரியாகக் கூறுதல் |
| | | | | 11.2 நட்பு ரீதியான சொற்களைப் பயன்படுத்தி மற்றுமொருவ-ரிடம் இரண்டு தகவல்களை வினவுவார். | 11.2.1 நட்பு ரீதியான சொற்கள் பயன்படுத்தல்<br>11.2.2 தகவல் வினவுதல்<br>11.2.3 பொருத்தமான மெய்ந் நிலை களை வெளிக் காட்டுவார். |
| | | ■ பரஸ்பர கண்ணியத்துடன் செவிமடுத்தலும் பேசுதலும்<br>■ சொற்களின் சரியான உச்சரிப்பு<br>■ குரல் கட்டுப்பாடு | | 11.3 மற்றுமொருவர் வினவும் இரண்டு விடயங்கள் தொடர்பில் நடபு ரீதியான சொற்களைப் பயன்படுத்தி வாய்மொழி மூலம் விடை யளிப்பார். | 11.3.1 நட்பு ரீதியான சொற்கள் பயன்படுத்தல்<br>11.3.2 வினவப்படும் விடயங்க ளுக்கு விடை கூறுதல்<br>11.3.3 பொருத்தமான மெய்ந்நிலை களை வெளிக் காட்டுவார். |

**செயற்பாடு 11.1, 11.2, 11.3 : நட்புடன் உரையாடுவோம்.**

**காலம் : ஒரு மணித்தியாலம்**

**சொற்களஞ்சியம் : நன்றி, மன்னியுங்கள், தயவு செய்து**

**கற்றல் கற்பித்தற் செயன்முறை :**

**படிமுறை : 01**

- கீழே தரப்பட்டுள்ள கதையை சில தடவைகள் செவிமடுக்கச் மாணவர்க்குச் சந்தர்ப்பமளியுங்கள்.

**நல்ல நண்பர்கள்**

**கமலன் அறையில் பாடம் படித்துக் கொண்டிருந்தான்.**

**"கமலன், உங்கள் நண்பி வந்திருக்கிறாள்" அம்மா கூறினார்.**

**"வருகிறேன் அம்மா" எனக் கூறியவாறு கமலன் வரவேற்பறைக்கு வந்தான்.**

**"கமலன் காலை வணக்கம்" மாதவி கூறினாள்.**

**"கமலன், மாதவியோடு கதையுங்கள், நான் தேநீர் தயாரிக்கின்றேன்"**

**நன்றி மாமி, நான் தேநீர் குடித்து விட்டுத்தான் வந்தேன். மாதவி, கமலனின் தாயாரை நோக்கிக் கூறினார்.**

**அன்று உங்களது புத்தகத்தின் ஒரு தாளைக் கிழித்து விட்டேன் மாதவி, என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். நான் வேண்டுமென்றே செய்யவில்லை. தவறுதலாகத்தான் நடந்தது" என்று கமலன் கூறினான்.**

**"ஆம் கமலன் அது எனக்குத் தெரியும். என்னையும் மன்னியுங்கள்" அப்போது எனக்குக் கவலை ஏற்பட்டது. அதனால் தான் ஆசிரியையிடம் சொன்னேன்" என்று மாதவி கூறினாள்.**

**"மாதவி உங்களிடம் இருக்கும் கதைப்புத்தகத்தை தயவு செய்து எனக்கும் தருவீர்களா? கமலன் கேட்டான்.**

**"சரி தருகிறேன், நல்ல நல்ல நண்பர்கள் அல்லவா? மாதவி கூறினாள்.**

- மேற்படி கதையின் உள்ளடக்கத்தை மாணவருடன் கலந்துரையாடுங்கள்.
- கதையில் அடங்கியுள்ள, நட்புணர்வை வெளிப்படுத்தும் சந்தர்ப்பங்கள் குறித்து மாணவருடன் கலந்துரை யாடுங்கள்.
- அவ்வாறாக நட்புணர்வை வெளிப்படுத்தும் சொற்களை கதையிலிருந்து சுட்டிக்காட்டுங்கள்.
- தமக்கு நெருக்கமானவர்கள், அன்பர்கள், உறவினர்களுடன் நட்புடன் உரையாடும்போது நட்புணர்வை வெளிப்படுத்தும் சொற்களைப் பயன்படுத்துவதன் பெறுமானத்தை மாணவர்க்கு எளிமையாக விளக்குங்கள்.
- நட்புணர்வினை வெளிப்படுத்தும் சொற்கள் மற்றும் நட்புணர்வை வெளிப்படுத்தும்போது நடந்து கொள்ள வேண்டிய விதம் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுங்கள்.
- நாளாந்த வாழ்க்கையில் நட்புணர்வை வெளிப்படுத்தும் சந்தர்ப்பங்கள் யாவை என மாணவருடன் கலந்துரையாடுங்கள்.
- அவ்வாறான சந்தர்ப்பங்கள் தொடர்பாக தமது அனுபவங்களைக் கூற மாணவர்க்குச் சந்தர்ப்ப மளியுங்கள்.

**படிமுறை : 02**

- மாணவரை இருவரிருவராகப் பிரியுங்கள்.
- நாளாந்தம் செய்யும் வேலைகள் குறித்து நண்பருடன் உரையாடச் சந்தர்ப்பமளியுங்கள்.

  உதாரணம் :
  - நண்பரிடம் புத்தகத்தை, பென்சிலைத் தருமாறு கேட்டல்
  - முன்னைய தினம் (நேற்று வீட்டில் விளையாட்டு, ஒரு விளையாட்டு குறித்து வினவுதல்)
  - பாடசாலை வரும் வழியில் கண்டவை பற்றிக் கேட்டல்
  - செய்த உதவிக்கு நன்றி தெரிவித்தல்
- நட்பு ரீதியான சொற்களைப் பயன்படுத்தி குறித்த தகவல்களை வினவுமாறு மாணவர்க்கு அறிவுறுத்தல் வழங்குங்கள்.
- தமது நண்பன் வினவும் வினாக்களுக்கு நட்புணர்வை வெளிப்படுத்தும் சொற்களைப் பயன்படுத்தி, விடை யளிக்குமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.
- நட்புணர்வை வெளிப்படுத்தும் சொற்களை மாத்திரமன்றி, மரியாதையையும், நட்புணர்வையும் வெளிப் படுத்தும் மெய்ந்நிலைகளையும் பயன்படுத்துவதை வலியுறுத்துங்கள்.
- படிமுறை 1 இல் பயன்படுத்திய நல்ல நண்பர்கள் எனும் கதையில் கமலன், மாதவி, தாய் ஆகிய பாத்திரங்களைக் கருதி நட்புடனும் மரியாதையாகவும் தகவல்களை வினவும் விதத்தையும் அவ்வினாக்களுக்கு விடையளிக்கும் விதத்தையும் மீண்டும் உதாரணங்களைச் சுட்டிக்காட்டி வலியுறுத்துங்கள்.
- அதற்கமையத் தகவல்களை வினவுதல், அவ்வினாக்களுக்கு விடையளித்தல் தொடர்பான ஆசிரியர் செய்துகாட்டலொன்றினை மாணவர் செயற்பாட்டுக்கு முன்னர் நடத்திக் காட்டுங்கள்.

**படிமுறை : 03**

- இயலுமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் மாணவரது உரையாடல்களை அவதானித்து, நட்புணர்வை வெளிப்படுத்தும் சொற்களைப் பயன்படுத்துமாறு அவர்களை வழிப்படுத்துங்கள்.

**கணிப்பீடு :**

| செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதி | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | | பாண்டித்தியத்திற்குத் தொலைவில் உள்ளார். | |
|---|---|---|---|---|---|
| | | 4 | 3 | 2 | 1 |
| 11.1 ஏனை யோருடன் நட்புடன் உரையாடும் போது மரியாதையை வெளிப் படுத்தும் மூன்று சொற்களைக் கூறுவார். | 11.1.1 சரியானதாக இருத்தல் | மூன்று சொற்களையும் சரியாகக் கூறுவார். | இரண்டு சொற் களையும் சரியாகக் கூறுவார். | ஒரு சொல்லை சரியாகக் கூறுவார். | ஏனையோரின் உதவியுடன் ஒரு சொல்லை யேனும் சரியாகக் கூறுவார். |
| 11.2 நட்பு ரீதியான சொற்களைப் பயன்படுத்தி மற்றுமொரு வரிடம் இரண்டு தகவல் களை வினவுவார். | 11.2.1 நட்புற வுடனான சொற்களாக இருத்தல் | எப்பொழுதும் நட்பு ரீதியான சொற்களைப் பயன்படுத்துவார். | பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நட்பு ரீதியான சொற்களைப் பயன்படுத்துவார். | சில சந்தர்ப்பங்களில் நட்பு ரீதியான சொற்களைப் பயன்படுத்துவார். | ஒரு சில சந்தர்ப்பங்களில் நட்பு ரீதியான சொற்களைப் பயன்படுத்துவார். |
| | | இரண்டு தகவல்களையும் மிகச் சரியாக வினவுவார். | இரண்டு தகவல்களையும் சிறு குறைபாடு களுடன் வினவுவார். | ஒரு தகவலைச் சரியாக வினவுவார். | ஏனையோரின் உதவியுடன் ஒரு தகவலை யேனும் சரியாக வினவுவார். |
| | | எப்பொழுதும் பொருத்தமான மெய்ந் நிலைகளை வெளிக் காட்டுவார். | பெரும்பாலான வேளைகளில் பொருத்தமான மெய்ந்நிலை களை வெளிக் காட்டுவார். | ஒரு சில வேளை களில் பொருத்த மான மெய்ந்நிலை களை வெளிக் காட்டுவார். | பொருத்தமான மெய்ந் நிலைகளை வெளிக்காட்டு வதில்லை. |

| **செயலாற்றுகைத் தர நியமங்கள்** | **கணிப்பீட்டு நியதி** | **பாண்டித்தியம் அடைந்துள்ளார்** | | **பாண்டித்தியத்திற்குத் தொலைவில் உள்ளார்.** | |
|---|---|---|---|---|---|
| | | 4 | **3** | **2** | **1** |
| 11.3 மற்றுமொருவர் வினவும் இரண்டு விடயங்கள் தொடர்பில் நட்பு ரீதியான சொற்களைப் பயன்படுத்தி வாய்மொழி மூலம் விடையளிப்பார். | 11.2.2 தகவல்கள் பூரணமாக இருத்தல் | எப்பொழுதும் நட்பு ரீதியான சொற்கள் பயன்படுத்துவார். | பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நட்பு ரீதியான சொற்கள் பயன்படுத்துவார். | சில சந்தர்ப்பங்களில் நட்பு ரீதியான சொற்கள் பயன்படுத்துவார். | ஒரு சில சந்தர்ப்பங்களில் நட்பு ரீதியான சொற்கள் பயன்படுத்துவார். |
| | | இரண்டு விடயங்கள் தொடர்பில் மிகச் சரியாக விடையளிப்பார். | இரண்டு விடயங்கள் தொடர்பில் சிறு குறைபாடுகளுடன் விடையளிப்பார். | ஒரு விடயத்துக்காக சரியாக விடையளிப்பார் | ஏனையோரின் உதவியுடன் ஒரு விடயத்துக்கேனும் சரியாக விடையளிப்பார் |
| | | எப்பொழுதும் பொருத்தமான மெய்ந்நிலைகளை வெளிப்படுத்துவார். | பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மெய்ந்நிலைகளை வெளிப்படுத்துவார். | ஒரு சில சந்தர்ப்பங்களில் பொருத்தமான மெய்ந்நிலைகளை வெளிப்படுத்துவார். | பொருத்தமான மெய்ந்நிலைகளை வெளிப்படுத்துவதில்லை. |

**பாடதிட்ட உள்ளடக்கம்**

**சித்திரங்கள் / படங்கள்**

| மொழியின் சமூகப் பணி, சாத்திரியப் பணி | கற்றற்பேறு | விடய உள்ளடக்கம் | சிறப்பான மொழித் திறன்கள் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதி |
|---|---|---|---|---|---|
| SLF/ALF | 12 படமொன்றினை அவதானித்து அதனைத் தழுவி வினவப்படும் வினாக் களுக்கு வாய்மொழி மூலம் விடை யளிப்பார். | ”பிராணிகளின் உலகம்” எனும் கருப் பொருளின்கீழ் ஒரு சம்பவம் இரண்டு பாத்திரங்கள் உள்ளடக்கிய சூரிய உதயக் காட்சி அடங்கிய சித்திரம் படம்<br>▪ படத்தில் உள்ள வற்றை விவரிப் பதற்குத் தேவையான சொற்கள் | ▪ செவி மடுத்தல்<br>▪ பேசுதல் | 12.1 ஒரு சம்பவத்தைக் காட்டும் படமொன்றினை கவனமாக அவதானித்து அதில் உள்ள பாததிரங்கள் பொருள்கள் ஊடாக வெளிப்படும் கருத்தைக் கூறுவார். | 12.1.1 சரியாக இருத்தல் |
| | | ▪ பேச்சு மொழி யில் எளிமையான வாக்கியங்கள்<br>▪ வினா வாக்கியங் கள்<br>▪ தன்னடக்கம்<br>▪ சொற்களின் சரியான உச்சரிப்பு | | 12.2 ஒரு சம்பவத்தைக் காட்டும் படமொன்றினை கவனமாக அவதானித்து அதனைத் தழுவி வினவப்படும் மூன்று வினாக்களுக்கு வாய்மொழி மூலம் விடையளிப்பார். | 12.2.1 சரியாக இருத்தல் |

| மொழியின் சமூகப் பணி, சாத்திரியப் பணி | கற்றற்பேறு | விடய உள்ளடக்கம் | சிறப்பான மொழித் திறன்கள் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதி |
|---|---|---|---|---|---|
| | | ■ பரஸ்பர கண்ணியத்துடன் செவிமடுத்தலும் பேசுதலும்<br>■ சொற்களின் சரியான உச்சரிப்பு<br>■ குரல் கட்டுப்பாடு | | 12.3 மற்றுமொருவர் வினவும் இரண்டு விடயங்கள் தொடர்பில் நடபு ரீதியான சொற்களைப் பயன்படுத்தி வாய்மொழி மூலம் விடை யளிப்பார். | 12.3.1 நட்பு ரீதியான சொற்கள் பயன்படுத்தல்<br>12.3.2 வினவப்படும் விடயங்க ளுக்கு விடை கூறுதல்<br>12.3.3 பொருத்தமான மெய்ந்நிலை களை வெளிக் காட்டுவார். |

**செயற்பாடு 12.1** : **சித்திரப் படமொன்றை அவதானிப்போம். எதிர்வினைக் காட்டுவோம்.**

**காலம்** : ஒரு மணித்தியாலம்

**கற்றல் வளங்கள்** : சித்திரப் படம் (ஏற்கனவே தயாரித்தது)

**கற்றல் கற்பித்தற் செயன்முறை** :

**படிமுறை : 01**

- பின்வரும் படத்தை மாணவர் யாவரும் தெளிவாகப் பார்க்கத்தக்கவாறு காட்சிப்படுத்துங்கள்.



- படத்தில் காணப்படுபவற்றைப் பெயரிட மாணவர்க்குச் சந்தர்ப்பமளியுங்கள்.

**படிமுறை : 02**

- படத்தினால் வெளிப்படுத்தப்படும் கருத்தைக் கூறுமாறு மாணவர்க்கு அறிவுறுத்தல் வழங்குங்கள்.
- படத்தினால் வெளிப்படுத்தப்படும் கருத்தைக் கூறும்போது அதில் அடங்கியுள்ள எல்லா விடயங்களையும் கவனத்திற் கொள்ள வேண்டும் என்பதை எளிமையான உதாரணங்காட்டி விளக்குங்கள்.
- படத்தில் உள்ள எல்லாவற்றையும் நுணுக்கமாக அவதானித்தல் வேண்டும் எனவும் படத்தில் வெவ்வேறு பகுதிகளுக்கு இடையிலான தொடர்பு பற்றியும் கவனஞ்செலுத்துவது முக்கியமானது எனவும் மாணவர்க்கு எளிமையாக விளக்குங்கள்.

**படிமுறை : 03**

- மேற்படி படத்தைத் தழுவி, மாணவரிடம் எளிமையான மூன்று வினாக்கள் வினவுங்கள்.
- அவ்வினாக்களுக்கு வாய்மொழி மூலம் விடை கூறுமாறு அறிவுறுத்துங்கள்.

**கணிப்பீடு**

| செயலாற்றுகைத் தர நியமம் | கணிப்பீட்டு நியதி | பாண்டித்தியம் அடைந்துள்ளார். | | பாண்டித்தியத்திற்குத் தொலைவில் உள்ளார். | |
|---|---|---|---|---|---|
| 12.1 ஒரு சம்பவத்தைக் காட்டும் படமொன்றினை கவனமாக அவதானித்து அதில் உள்ள பாத்திரங்கள் பொருள்கள் ஊடாக வெளிப்படும் கருத்தைக் கூறுவார். | 12.1.1 சரியானதாக இருத்தல் | மிகச் சரியான கருத்தை வெளிப்படுத்துவார். | | சரியான கருத்தை வெளிப்படுத்தமாட்டார். | |
| 12.2 ஒரு சம்பவத்தைக் காட்டும் படமொன்றினை கவனமாக அவதானித்து அதனைத் தழுவி வினவப்படும் மூன்று வினாக் களுக்கு வாய்மொழி மூலம் விடையளிப்பார். | 12.2.1 சரியானதாக இருத்தல் | 4<br>மூன்று வினாக்களுக்கும் சரியாக விடை கூறுவார். | 3<br>இரண்டு வினாக்களுக்கும் சரியாக விடை கூறுவார். | 2<br>ஒரு வினாவுக்கு சரியாக விடை கூறுவார். | 1<br>ஏனையோரின் உதவியுடன் ஒரு வினாவுக்கேனும் விடை கூறுவார். |

**பாடதிட்ட உள்ளடக்கம்**

## எளிமையான சிறுவர் பாடல்கள்

| மொழியின் சமூக மற்றும் கல்விப் பணி | கற்றற்பேறு | உள்ளடக்கம் | சிறப்பான மொழித் திறன்கள் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதி |
|---|---|---|---|---|---|
| SLF/ALF | 13. எளிமையான சிறுவர் பாடலொன் றைச் செவிமடுத்து அதனைத் தழுவி வினவப்படும் வினாக் களுக்கு வாய்மொழி மூலம் விடை யளிப்பார். | "எமது பிராணி களின் உலகம்" எனும் கருப் பொரு- ளைத் தழுவி எழுதப் பட்ட எளிமையான ஒரு பாடல்<br>▪ வினைச் சொற்கள்<br>▪ தன்னடக்கம்<br>▪ விளக்கம்<br>▪ கவனம்<br>▪ சரியான உச்சரிப்பு<br>▪ மெய்ந்நிலை களும் அங்க அசைவுகளும் | ▪ செவி மடுத்தல்<br>▪ பேசுதல் | 13.1 எளிமையான சிறுவர் பாடலொன்றை கவனமாகவும் விளக்கத் துடனும் செவிமடுத்து, அதில் அடங்கியுள்ள ஒரு நிகழ்வை ஞாபகத்தில் கூறுவார். | 13.1.1 நிகழ்வை ஞாபகத்தில் கூறுதல் |
| | | | | 13.2 எளிமையான சிறுவர் பாடலொன் றைக் கவனமாகவும் விளக்கத் துடனும் செவிமடுத்து அதனைத் தழுவி வினவப்படும் மூன்று வினாக்களுக்கு வாய்மொழி மூலம் விடை கூறுவார். | 13.2.1 விடைகள் சரியாக இருத்தல் |

**செயற்பாடு 13.1, 13.2** : **பாடலொன்று கேட்போம், எதிர்வினை காட்டுவோம்**

**காலம்** : ஒரு மணித்தியாலம்

**கற்றல் வளங்கள்** : பாடல் அடங்கிய ஒலி நாடா (QR Code)

**சொற்களஞ்சியம்** : பாடல், மயில், மான், தோகை, பாம்பு, முயல், நரி, சிங்கம்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை** :

**படிமுறை : 01**

மயிலைப் பாரு

மயிலைப் பாரு மயிலைப் பாரு
தோகை விரித்து ஆடுது
மானைப் பாரு மானைப் பாரு
துள்ளித் துள்ளித் ஓடுது

பாம்பைப் பாரு பாம்பைப் பாரு
படமெடுத்து ஆடுது
முயலைப் பாரு முயலைப் பாரு
தாவித்தாவி ஓடுது

நரியைப் பாரு நரியைப் பாரு
தந்திரங்கள் பண்ணுது
காட்டரசன் சிங்கத்தைக்
கண்டு எல்லாம் ஓடுது

- ஒலி நாடா மூலம் **மயிலைப் பாரு......** என்ற பாடலைச் சில தடவைகள் செவிமடுக்க மாணவர்க்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- கவனமாகவும் தன்னடக்கத்துடனும் செவிமடுக்குமாறு மாணவர்க்கு அறிவுறுத்தல் வழங்குங்கள்.
- கவனமாகவும் தன்னடக்கத்துடனும் செவிமடுத்தலின் முக்கியத்துவத்தை மாணவர்க்கு எளிமையாக விளக்குவார்.

**படிமுறை : 02**

- மேற்படி பாடலில் உள்ளடக்கம் குறித்து மாணவருடன் கலந்துரையாடுங்கள்.
- பாடலில் அடங்கியுள்ள நிகழவுகள் குறித்து மாணவரின் கவனத்தை ஈர்த்து, அவ்வொவ்வொரு நிகழ்வு தொடர்பாகவும் மாணவருடன் கலந்தரையாடுங்கள்.
- பாடலில் அடங்கியுள்ள ஒரு நிகழ்வை ஞாபகத்திக் கூற மாணவர்க்குச் சந்தர்ப்பமளியுங்கள்.

**படிமுறை : 03**

- பாடலைத் தழுவி எளிமையான மூன்று வினாக்கள் வினவ வாய்மொழி மூலம் விடை கூற மாணவர்க்கு அறிவுறுத்துங்கள்.

  உதாரணம் :
  - எது தோகை விரித்து ஆடுது?
  - எது துள்ளித் துள்ளித் ஓடுது?
  - எது தாவித்தாவி ஓடுது?

**கணிப்பீடு :**

| செயலாற்றுகைத் தர நியமம் | கணிப்பீட்டு நியதி | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | | பாண்டித்தியத்திற்குத் தொலைவில் உள்ளார். | |
|---|---|---|---|---|---|
| 13.1 எளிமையான சிறுவர் பாட லொன்றைக் கவனமாகவும் விளக்கத் துடனும் செவிம டுத்து,அதில் அடங்கியுள்ள ஒரு நிகழ்வை ஞாபகத்தில் கூறுவார். | 13.1.1 சரியானதாக இருத்தல். | நிகழ்வை மிகச் சரியாக ஞாபகத்தில் கூறுவார். | | நிகழ்வை ஞாபகத்தில் கூறமாட்டார். | |
| 13.2 எளிமையான சிறுவர் பட லொன்றைக் கவனமாகவும் விளக்கத் துடனும் செமடுத்து அதனைத் தழுவி வினவப்படும் மூன்று வினாக் களுக்கு வாய்மொழி மூலம் விடை கூறுவார். | 13.2.1 சரியானதாக இருத்தல். | **4** | **3** | **2** | **1** |
| | | மூன்று வினாக் களுக்கும் சரியாக விடை கூறுவார். | இரண்டு வினாக்களுக்கும் சரியாக விடை கூறுவார். | ஒரு வினாவுக்கு சரியாக விடை கூறுவார். | ஏனையோரின் உதவியுடன் ஒரு வினாவுக் கேனும் சரியாக விடை கூறுவார். |

**பாடதிட்ட உள்ளடக்கம்**

## எளிமையான பந்திகள்

| மொழியின் சமூகப் பணி, சாத்திரியப் பணி | கற்றற்பேறு | உள்ளடக்கம் | சிறப்பான மொழித்திறன் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதி |
|---|---|---|---|---|---|
| SLF/ALF | 14. எளிமையான ஒரு பந்தி யைச் செவிமடுத்து அதனைத் தழுவி வினவப் படும் வினாக் களுக்கு வாய்மொழி மூலம் விடை யளிப்பார். | "எனது பிராணிகள் உலகம் எனும் கருப் பொருளின் கீழ் எழுதப்பட்ட ஏறத்தாழ 60 சொற்கள் அடங்கிய எளிமையான ஒரு பந்தி<br>■ வினைச் சொற்கள்<br>■ தன்னடக்கம்<br>■ விளக்கம்<br>■ கவனம்<br>■ சரியான உச்சரிப்பு<br>■ மெய்ந்நிலை களும் அங்க அசைவுகளும் | ■ செவி மடுத்தல்<br>■ பேசுதல் | 14.1 ஏறத்தாழ 60 சொற்கள் அடங்கிய ஒரு பந்தியைக் கவனமாகவும் விளக்கத் துடனும் செவிமடுத்து அதில் அடங்கியுள்ள ஒரு நிகழ்வை ஞாபகத்துடன் கூறுவார். | 14.1.1 நிகழ்வை மனனமாகக் கூறுதல் |
| | | | | 14.2 ஏறத்தாழ 60 சொற்கள் அடங்கிய ஒரு பந்தியைக் கவனமாகவும் விளக்கத் துடனும் செவிமடுதது அதனைத் தழுவி வினவப் படும் மூன்று வினாக்களுக்குச் சரியாக விடையளிப் பார். | 14.2.1 விடைகள் சரியாக இருத்தல் |

**செயற்பாடு 14.1, 14.2** : **பந்தியைச் செவிமடுப்போம், எதிர்வினை காட்டுவோம்.**

**காலம்** : ஒரு மணித்தியாலம்

**சொற்களஞ்சியம்** : காலைப்பொழுது, தேன் சிட்டு, பறவைகளின் நாதம்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை** :

**படிமுறை : 01**

- பின்வரும் பந்தியை சில தடவை செவிமடுக்க மாணவர்க்குச் சந்தர்ப்பமளியுங்கள்.

**காலைப்பொழுது**

**காலையில் சூரியன் உதித்தது, பறவைகள் கூடுகளில் இருந்து வெளியே வந்தன. அவை உணவு தேடிப் பறந்து சென்றன. பறவைகளின் நாதம் எங்கும் பரவியது.**

**பூச்செடிகளில் வண்ண வண்ணப் பூக்கள் பூத்துள்ளன. பார்க்க அழகாக உள்ளது. பூக்களின் தேன் குடிக்க தேன் சிட்டுக்கள் வந்தன. தேனீக்களும் வந்தன.**

**காலையில் சுற்றுப்புறம் அழகாக உள்ளது. கமலனும் மாதவியும் அச்சுற்றுப்பபுறத்தை நீண்ட நேரம் பார்த்துக் கொண்டிருந்தனர். பின் பாடங்களைப் படித்தனர்.**

- கவனமாகவும் தன்னடக்கத்துடனும் பந்தியைச் செவிமடுக்குமாறு மாணவர்க்கு அறிவுறுத்துங்கள்.
- கவனமாகவும் தன்னடக்கத்துடனும் செவிமடுப்பதன் முக்கியத்துவத்தை மாணவர்க்கு விளக்குங்கள்.

**படிமுறை : 02**

- இப்பந்தியின் உள்ளடக்கத்தை மாணவருடன் கலந்தரையாடுங்கள்.
- பந்தியில் அடங்கியுள்ள நிகழ்வுகள் சம்பவங்கள் தொடர்பாக மாணவரது கவனத்தை ஈர்த்து அவை தொடர்பாக அவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- பந்தியில் அடங்கியள்ள ஒரு நிகழ்வை ஞாபகப்படுத்திக் கூற மாணவர்க்குச் சந்தர்ப்பமளியுங்கள்.

**படிமுறை : 03**

- பந்தியைத் தழுவி மாணவரிடமே எளிமையான மூன்று வினாக்கள் வாய்மொழி மூலம் விடைகளைப் பெறுங்கள்.

  உதாரணம்:
  - காலையில் கூடுகளிலிருந்து வெளியே வந்தவை யாவை?
  - தேன் குடிக்க வந்தவை யாவை?
  - கமலனும் மாதவியின் நாளில் எந்த நேரத்தில் பாடம் படித்தனர்?

**கணிப்பீடு :**

| செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதி | பாண்டித்தியம் அடைந்துள்ளார். | | பாண்டித்தியத்திற்குத் தொலைவில் உள்ளார். | |
|---|---|---|---|---|---|
| 14.1 ஏறத்தாழ 60 சொற்கள் அடங்கிய ஒரு பந்தியைக் கவனமாகவும் விளக்கத் துடனும் செவ-ிமடுதது அதில் அடங்கியுள்ள ஒரு நிகழ்வை ஞாபகத்துடன் கூறுவார். | 14.1.1 சரியாக இருத்தல் | நிகழ்வை மிகச் சரியாக ஞாபகத்தில் கூறுவார். | | நிகழ்வை ஞாபகத்தில் கூறமாட்டார் | |
| 9.2 ஏறத்தாழ 60 சொற்கள் அடங்கிய ஒரு பந்தியைக் கவன மாகவும் விளக்கத் துடனும் செவிமடுதது அதனைத் தழுவி வினவப்படும் மூன்று வினாக் களுகுச் சரியாக விடையளிப் பார். | 14.2.1 சரியாக இருத்தல் | **4** | **3** | **2** | **1** |
| | | மூன்று வினாக்களுக்கும் சரியாக விடை கூறுவார். | இரண்டு வினாக்களுக்கும் சரியாக விடை கூறுவார். | ஒரு வினாக்களுக்கும் சரியாக விடை கூறுவார். | ஏனையே-ாரின் உதவ-ியுடன் ஒரு வினாவுக் கேனும் சரியாக விடை கூறுவார். |

பாடதிட்ட உள்ளடக்கம்

## நடு, நடு, நடுக் கீழ் எழுத்துக்கள் - வாசித்தலும் எழுதுதலும்

| மொழியின் சமூக மற்றும் கல்விப் பணி | கற்றற்பேறு | உள்ளடக்கம் | சிறப்பான மொழித் திறன்கள் | செயலாற் றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதி |
|---|---|---|---|---|---|
| SLF/ALF | 18. வாசிக்கும் பொழுதும் எழுதும் பொழுது நடு, நடுக் கீழ்(உயிர் மெய்) எழுத்துக் களை சரியாகப் பயன் படுத்துவார். | ▪ சொல்லின் முதல் ஒலி<br>▪ நடு, நடுக் கீழ் (உயிர் மெய்) எழுத்துக்கள்<br>▪ சரியான உச்சரிப்பு<br>▪ எழுதுதல்<br>▪ எழுத ஆயத்த மாதல் (சரியான கொண்ணிலை அமருதல், புத்தகத்தை வைத்திருத்தல், பென்சிலைப் பிடித்தல்<br>▪ நான்கு கோடு<br>▪ தனிக் கோடு<br>▪ எழுத்து பொறி முறைத் திறன்கள் (எழுத்தின் அளவு திசைமுகம், உறுப்பு, நேர்த்தி, முழுமை, சொல்லில் எழுத்துக்களுக்கு இடையிலான இடைவெளி) | ▪ செவி மடுத்தல்<br>▪ பேசுதல்<br>▪ வாசித்தல்<br>▪ எழுதுதல் | 18.1 பொறிமுறைத் திறன்கள் நடு, நடுக் கீழ்(உயிர் மெய்) எழுத்துக் களை நான்கு கோட்டில் எழுதுவார். | 18.1.1 உறுப்பமைய எழுதுதல்<br>18.1.2 சரியான வடிவத்தில் எழுதுதல்<br>18.1.3 சரியான அளவுப்படி எழுதுதல்<br>18.1.4 சரியாக திசைமு-கத்துடன் எழுதுதல் |
| | | | | 18.2 நடு, நடுக் கீழ் (உயிர் மெய்) எழுத்துக் களைச் சரியான உச்சரிப்புடன் உரத்து வாசிப் பார். | 18.2.1 எழுத்துக் களைச் சரியாக உச்சரித்தல் |
| | | | | 18.3 நடு, நடுக் கீழ் (உயிர் மெய்) எழுத்துக்கள் | 18.3.1 உரிய உறுப்பமைய இருத்தல்<br>18.3.2 சரியான வடிவம் இருத்தல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | ■ கற்ற எழுத்துக்கள் அடங்கிய சொற்கள்<br>■ எழுத்துச் சேர்மானம்<br>■<br>ஈரெழுத்துச் சொற்கள்<br>■<br>மூவெழுத்துச் சொற்கள | | மூவெழுத்துச் சொற்கள் இரண்டு வீதம் பொறிமுறைத் திறன்களை வெளிப்படுத்தி நான்கு கோட்டில் எழுதுவார். | 18.3.3 சரியான அளவில் எழுதுதல்<br>18.3.4 சரியான திசை முகத்தை அனுசரித்தல்<br>18.3.5 சொல்லில் எழுத்துக் களுக்கு இடையே உரிய இடைவெளி இருத்தல் |
| | | | | 18.4 நான்கு கோட்டில் எழுதிய நான்கு சொற்களை சரியான உச்சரிப்புடன் உரத்து வாசிப்பார். | 18.4.1 சொற்களைச் சரியாக உச்சரித்தல் |
| | | | | 18.5 பொறிமுறைத் திறன்களை அனுசரித்து உதந்துரைக் கப்பட்ட உயிர் மெய் எழு-த்துக்களை தனிக் கோட்டில் எழுதுவார். | 18.5.1 உரிய உறுப் புக்கள் இருத்தல்<br>18.5.2 சரியான வடிவம் இருத்தல்<br>18.5.3 சரியான அளவு இருத்தல்<br>18.5.4 சரியான திசைமுகம் இருத்தல |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | 18.6 விதந்துரைக் கப்பட்ட நடு, நடுக் கீழ் (உயிர் மெய்) எழுத்துக்கள் அடங்கிய ஈரெழுத்து, மூவெழுத்துச் சொற்கள் இரண்டு வீதம் பொறிமுறைத் திறன்களை வெளிப்படுத்தி தனிக்கோட்டில் எழுதுதல் | 18.6.1 உரிய உறுப்புக்கள் இருத்தல்<br>18.6.2 சரியான வடிவம் இருத்தல்<br>18.6.3 சரியான அளவு இருத்தல்<br>18.6.4 சரியான திசைமுகம் இருத்தல்<br>18.6.5 சொல்லில் எழுத்துக் களுக்கு இடையே உரிய இடைவெளி இருத்தல் |
| | | | | 18.7 விதந்துரைக்கப் பட்டநடு, நடுக் கீழ் (உயிர் மெய்) எழுத்-துக்கள் அடங்கிய, ஈரெழுத்து, மூவெழுத்து, நாலெழுத்-துச் சொற்கள் இரண்டு வீதம் பொறிமுறைத் திறன்களை வெளிப்படுத்தி தனிக் கோட்டில் எழுதுவார். | 18.7.1 சரியான திசை முகத்தை அனுசரித்தல்<br>18.7.2 சொல்லின் எழுத்துக் களுக்கு இடையே உரிய இடைவெளி விடல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | 18.8 தனிக்கோட்டின் எழுதப்பட்ட ஆறு சொற்களைச் சரியான உச்சரிப் புடன் உரத்து வாசிப் பார். | 18.8.1 சொற்களைச் சரியாக உச்சரித்தல் |

♦ எழுத்துக்கள் அறிமுகஞ் செய்தல்

**செயற்பாடு 02**

தமிழ் நெடுங்கணக்கின் 18 (டா, பா, யா, மா ...............) உயிர் மெய் எழுத்துக்கள் மாணவர்க்குக் கற்பிப்பதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. பரவலாகப் பயன்படும் எழுத்துக்களைக் கவனத்திற் கொண்டு இந்த எழுத்துக்களை தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அதற்கமைய தரம் 1 இல் இரண்டாந் தவணையில் கற்பிக்க வேண்டிய எழுத்துக்கள் ஒழுங்குமுறை கீழே தரப்பட்டுள்ளன.

1. நடுப்பகுதி எழுத்துக்கள்

**“நடுப்பகுதி எழுத்துக்கள்”** என்பன நான்கு கோடுகளுள் இரண்டாம் - மூன்றாம் கோடுகளுக்கு இடையே எழுதப்படும் எழுத்துக்கள் ஆகும்

டா பா யா மா

சா கா ஙா

வா லா ளா னா ணா

**2. நடுக் கீழ் பகுதி எழுத்துக்கள்**

"நடுக் கீழ் பகுதி எழுத்துக்கள்" நான்கு கோடுகளுள் இரண்டாம் மூன்றாம் நான்காம் கோடுகளுக்க இடையே எழுதப்படும் எழுத்துக்கள் ஆகும்.







இந்த எழுத்துக்களைக் கற்பிப்பதற்குரிய ஒழுஙகு முறையை அமைபபதற்காகப் பின்வரும் விடயங்கள் கவனத்திற் கொள்ளப்பட்டன.

1. தரம் 1 மாணர்களை இலகுவாகவும் தெளிவாகவும் உச்சரிக்கத்தக்க ஒலி கொண்ட எழுத்துக்களை முதலில் கற்பித்தல்
2. ஒழுங்கு முறையைத் தீருமானிப்பது தொடர்பில் எழுத்தின் வடிவமும் கவனத்திற் கொள்ள-ப்பட்டது. "ட" எழுதிய பிள்ளைக்கு பின்னர் அரவு ( **"ா"** ) சேர்த்து உயிர் மெய் எழுத்துக்களான (**"ஆ"** ஒலி) டா, பா, யா, மா ... ஆகிய எழுதுவது இலகுவாக அமையும். அதற்கமைய எழுத்துக்கள் வடிவமும் கவனத்திற் கொள்ளப்பட்டு, ஒப்பான வடிவமுள்ள எழுத்துக்களை அருகருகே அமையமாறு எழுத்துக்களின் ஒழுங்குமுறை தீர்மானிக்கப்பட்டுள்ளது.
3. நாளாந்தம் பரவலாகப் பயன்படும் தமிழ்ச் சொற்களில் இடம்பெறும் எழுத்துக்களை ஒழுங்கு சரிவையின் மேலெ இடுவது குறித்துக் கவனஞ் செலுத்தப்பட்டது.

   மேற்குறிப்பிட்ட எல்லா விடயங்களையும் கவனத்திற் கொண்டு இந்த எழுத்து ஒழுங்கு வரிசை தயாரிக்கப் பட்டுள்ளது என்பது கவனிக்கத்தக்கது.

- எழுத்துக்கள் கற்பிக்கும் பொழுது மாணவரின் உள ரீதியான சுமையாக அமையாத வகையில் கற்பித்தல் வேண்டும்
- அதற்கமைய கற்பிக்க வேண்டிய எழுத்துக்களை அறிமுகஞ் செய்யும் போது எளிமையான படங்கள், கதைகள் போன்ற ஆக்கச் செயற்பாடுகளையும் பயன்படுத்துங்கள்.

**செயற்பாடு 18.1, 18.2, 18.5 : எழுத்துக்களை வாசிப்போம், எழுதுவோம்.**

**காலம்** : 25 மணித்தியாலங்கள்

**கற்றல் வளங்கள்** : எழுத்தட்டை, சொல்லட்டை

**சொற்களஞ்சியம்** : எழுத்து, நான்கு கோட்டுப் புத்தகம் ஒற்றை றூள், மேல், நடு, கீழ், தொடக்கம், முடிவு, அளவு, அமைப்பு, வடிவம், திசை முகம்.

**படிமுறை : 01**

- பின்வரும் பந்தியை சில தடவைகள் உரத்து வாசியுங்கள்.

**எங்கள் வீட்டு தோட்டம் அழகானது. தோட்டத்தில் உள்ள மாமரத்தில் மாம்பழங்கள் பழுத்திருந்-தன. இருந்தது. மரத்தில் மாங்காய்களும் இருந்தன. மரத்தின் கிளையில் காகம் ஒன்று அமர்ந்தது. நான் காகத்தைக் கூர்ந்து நோக்கினேன்.**

- பந்தியில் உள்ளடக்கத்தை மாணவருடன் கலந்துரையாடுங்கள்.
- பந்தியில் இடம்பெற்றுள்ள “கா” எனும் எழுத்து முதலில் வரும் சொற்களின் பால் மாணவரது கவனத்தைத் திருப்புங்கள்.
- “கா” எழுத்து முதலில் வரும் இரண்டு அல்லது மூன்று சொற்களை உரத்து வாசியுங்கள்.

  உதாரணம் : காய், **காகம், காலம்,**

- அச்சொற்களில் முதல் வரும் ஒலி “ஆ” (க் + ஆ = கா) ஆகும் என அறிமுகஞ் செய்யுங்கள்
- “ஆ” ஒலி முதலில் வரும் சொற்கள் கூறுமாறு மாணவர்க்கு சந்தர்ப்பமளிக்கவும்.
- அந்த ஒலிக்குரிய எழுத்தின் உருவத்தைச் காட்டுங்கள் அந்த எழுத்து உருவம் ஆகும் எனக் கூறுங்கள். இதனை கரும்பலகையில் எழுதி காட்டலாம் அல்லது எழுத்து அட்டையாகக் காட்சிப் படுத்தலாம்.
- வெவ்வேறு எழுத்துக்களில் தொடங்கும் பட அட்டைகளை மாணவர்க் குழுக்களுக்கு வழங்குங்கள் அவற்றக்கு இடையே உள்ள “கா” எழுத்தில் ஆரம்பிக்கும் பட அடடைகளைத் தெரிவு செய்யுமாறு கூறுங்கள்.
- பின்னர் அந்த எழுத்தை எழுதும் சரியான திசையை அம்புக்குறிகளால் குறித்து, இலக்கமிட்டுக் காட்டுங்கள்.

  உதாரணம் :



- “கா” எழுத்தை உரத்துக் கூறியவாறு அதன் உருவத்தை, மேசைமீது அல்லது வெளியில் எழுதுமாறு மாணவரை வழிப்படுத்துக.

- எழுத்தின் வடிவததை வெட்டி, அதனை மாணவர்க்கு கொடுத்து, அதன் மீது சரியான திசையில் விரலால் தடவிச் செல்ல மாணவர்க்குச் சந்தர்ப்பமளியுங்கள்.

- நான்கு கோடுகளைப் பயன்படுத்தி புள்ளிக் கோடு மீது எழுத்து எழுத மாணவர்க்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- சரியான திசையில் எழுத்தை எழுதும் விதத்தை கரும்பலகையில் அல்லது காட்சிப்பலகையில் எழுதிக் காட்டி விளக்கமளியுங்கள்.

- பின்னர், **எழுத்தை அறிவோம் - 3** நூலில் உள்ள பயிற்சிகளில் மாணவரை ஈடுபடுத்துங்கள்.

- நான்கு கோட்டில் எழுதிய எழுத்துக்களை உரத்து வாசிக்குமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.

- அந்த எழுத்துக்களைப் பார்த்து எழுதுவதற்காக **எழுத்தை அறிவோம் - 3** நூலில் உள்ள பயிற்சிகளில் மாணவரை ஈடுபடுத்துங்கள்.

- எழுத்துக்களை முழுமையாக அறிமுகஞ் செய்யும் முறைப்படி, எல்லா எழுத்துக்களை “கா” எழுத்தை எழுதுவதற்குக் கையாண்ட அதே செயன்முறையைக் கையாண்டு எழுதவும் பின் வாசிக்கவும் வழிப் படுத்துங்கள்.

- எழுத்துக்களை வாசிக்கும்போது இயன்ற அளவுக்கு எழுத்தின் ஒலியை உச்சரிக்கும் செயற் பாடுகளில் மாணவரை ஈடுபடுத்துங்கள்.

  உதாரணம்: தொலைபேசியைக் காதின் மீது வைத்து கற்ற எழுத்துக்களின் ஒலிகளை உச்சரிக்கச் செய்யுங்கள்.

- நான்கு கோட்டில் சில எழுத்துக்களைப் பார்த்து எழுதிய பின்னர் அவ்வெழுத்துக்களைச் செவிமடுத்து நான்கு கோட்டில் எழுத மாணவர்க்குச் சந்தர்ப்பமளியுங்கள்.

- செவிமடுத்து எழுதும் பயிற்சிக்காக நான்கு கோட்டுப் புத்தகமொன்றை பயன்படுத்த வழிப்படுத் துங்கள்.

- சில எழுத்துக்களை அறிமுகஞ் செய்த பின்னர், அவ்வெழுத்துக்கள் அடங்கிய அட்டைகளை மாணவர்களுக்கு வழங்கி, பெயரிடப்படும் எழுத்துக்களைச் சுட்டிக்காட்டச் சந்தர்ப்பமளியுங்கள்.

- இதனை ஒரு விளையாட்டை போன்று நடத்தலாம்.

- இவ்வாறாகச் சில எழுத்துக்களை அறிமுகஞ் செய்த பின்னர் எழுத்தின் ஒலியை மீள நினைவூட்டும் வெவ்வேறு விளையாட்டுக்களை உள்ளடக்கிய செயற்பாடுகளை ஒழுங்குசெய்து நடத்துங்கள். உதாரணம்: அடங்கியுள்ள சொல்லைக் கூறியதும் குறித்துரைக்கப்பட்ட ஓர் இடத்துக்கு ஓடிச் செல்லல்

- இவ்வாறாக நான்கு கோட்டில் எழுத்துக்களை அறிமுகம் செய்த அதே செயன்முறையைக் கையாண்டு ஒற்றை றூளில் எழுதுவதற்கும் மாணவர்க்குச் சந்தர்ப்பமளியுங்கள்.

- ஒற்றை றூளில் புள்ளிக்கோட்டின்மீது எழுத்துக்கள் எழுதுவதற்காக **எழுத்தை அறிவோம் - 3** நூலில் உள்ள பயிற்சிகளில் மாணவரை ஈடுபடுத்துங்கள்.

- ஒற்றை றூளில், எழுத்துக்களைப் பார்த்து எழுத்துவதற்காக **எழுத்தை அறிவோம் - 3** நூலில் உள்ள பயிற்சிகளில் மாணவரை ஈடுபடுத்துங்கள்.

- எழுத்துக்களைச் செவிமடுத்து எழுதுவதற்காக ஒற்றை றூள் கொப்பியொன்றினைப் பயன்படுத்த வழிப் படுத்துங்கள்.

**கணிப்பிடு :**

| செயலாற் றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதிகள் | பாண்டித்தியம் அடைந்துள்ளார். | | பாண்டித்தியத்திற்குத் தொலைவில் உள்ளார். | |
|---|---|---|---|---|---|
| | | 4 | 3 | 2 | 1 |
| 18.1 பொறிமுறைத் திறன்களை வெளிப் படுத்தி, விதந்துரைக் கப்பட்ட உயிர் மெய் எழுத்துக்களை (18) நான்கு கோட்டில் எழுதுவார். | 18.1.1 உறுப்பமைய இருத்தல் | உயிர் மெய் எழுத்துக்கள் 18 - 15 உறுப்பமைய எழுதுதல் | உயிர் மெய் எழுத்துக்கள் 14-12 உறுப்பமைய எழுதுதல் | உயிர் மெய் எழுத்துக்கள் 11-9 உறுப்பமைய எழுதுதல் | உயிர் மெய் எழுத்துக்கள் 8 இலும் குறைவாக உறுப்பமைய எழுதுதல் |
| | 18.1.2 உரிய அமைப்புடன் இருத்தல் | உயிர் மெய் எழுத்துக்கள் 18-15 சரியான வடிவத்தில் எழுதுதல் | உயிர் மெய் எழுத்துக்கள் 14-12 சரியான வடிவத்தில் எழுதுதல் | உயிர் மெய் எழுத்துக்கள்11-9 சரியான வடிவ-த்தில் எழுதுதல் | உயிர் மெய் எழுத்துக்கள் 8 இலும் குறைவாக சரியான வடிவத்தில் எழுதுதல் |
| | 18.1.3 உரிய அளவுடன் இருத்தல் | உயிர் மெய் எழுத்துக்கள் 18 - 15 சரியான அளவுப் படி எழுதுதல் | உயிர் மெய் எழுத்துக்கள் 14-12 சரியான அளவுப்படி எழுதுதல் | உயிர் மெய் எழுத்துக்கள் 11-9 சரியான அளவுப்படி எழுதுதல் | உயிர் மெய் எழுத்துக்கள் 8 இலும் குறைவாக அளவுப்படி எழுதுதல் |
| | 18.1.4 உரிய திசை முகத்துடன் இருத்தல் | உயிர் மெய் எழுத்துக்கள் 18-15 சரியாக திசை முகத்துடன் எழுதுதல் | உயிர் மெய் எழுத்துக்கள் 14-12 சரியாக திசை முகத்துடன் எழுதுதல் | உயிர் மெய் எழுத்துக்கள்11-9 சரியாக திசை முகத்துடன் எழுதுதல் | உயிர் மெய் எழுத்துக்கள் 8 இலும் குறைவாக சரியாக திசை முகத்துடன் எழுதுதல் |

| செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதிகள் | பாண்டித்தியம் அடைந்துள்ளார். | | பாண்டித்தியத்திற்குத் தொலைவில் உள்ளார். | |
|---|---|---|---|---|---|
| | | 4 | 3 | 2 | 1 |
| 18.2 விதந்துரைக் கப்பட்ட உயிர் மெய் எழுத்துக்கள் எழுத்துக் களை (18) சரியான உச்சரிப்புடன் உரத்து வாசிப்பார். | 18.2.1 சரியாக இருத்தல் | உயிர் மெய் எழுத்-துக்கள்18-15 சரியாக உச்ச ரிப்பார் | உயிர் மெய் எழுத்துக்கள் 14-12 சரியாக உச்சரிப்பார் | உயிர் மெய் எழுத்துக்கள் 11-9 சரியாக உச்சரிப்பார் | உயிர் மெய் எழுத்துக்கள் 8 இலும் குறைவாக சரியாக உச்சரிப்பார் |
| | 18.2.2 சரியாக உச்சரித்தல் | உயிர் மெய் எழுத்துக்கள் 18-15 சரியாக உரத்துக் கூறுவார். | உயிர் மெய் எழுத்துக்கள் 14-12 சரியாக உரத்துக் கூறுவார். | உயிர் மெய் எழுத்துக்கள் 11-9 சரியாக உரத்துக் கூறுவார். | உயிர் மெய் எழுத்துக்கள் 8 இலும் குறைவாக சரியாக உரத்துக் கூறுவார். |

| செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதிகள் | பாண்டித்தியம் அடைந்துள்ளார். | | பாண்டித்தியத்திற்குத் தொலைவில் உள்ளார். | |
|---|---|---|---|---|---|
| | | 4 | 3 | 2 | 1 |
| 18.5 பொறிமுறைத் திறன்களை அனுசரித்து விதந்துரைக் கப்பட்ட உயிர் மெய் எழுத்துக்கள் ( 18 ) தனிக் கோட்டில் எழுதுவார். | 18.5.1 உறுப்பமைய இருத்தல் | உயிர் மெய் எழுத்துக்கள் 18-15 சரியாக உறுப்பமைய எழுதுவார். | உயிர் மெய் எழுத்துக்கள் 14-12 சரியாக உறுப்பமைய எழுதுவார். | உயிர் மெய் எழுத்துக்கள் 11-9 சரியாக உறுப்பமைய எழுதுவார். | உயிர் மெய் எழுத்துக்கள் 8 இலும் குறைவாக சரியாக உறுப்பமைய எழுதுவார். |
| | 18.5.2 உரிய அமைப்புடன் இருத்தல் | உயிர் மெய் எழுத்-துக்கள்18-15 சரியான வடிவ-த்தில் எழு-துவார். | உயிர் மெய் எழுத்துக்கள் 14-12 சரியான வடிவத்தில் எழுதுவார். | உயிர் மெய் எழுத்துக்கள் 11-9 சரியான வடிவத்தில் எழுதுவார். | உயிர் மெய் எழுத்துக்கள் 8 இலும் குறைவாக சரியான வடிவத்தில் எழுதுவார். |
| | 18.5.3 உரிய அளவுடன் இருத்தல் | உயிர் மெய் எழுத்துக்கள் 18 -15 சரியான அளவுடையதாக எழுதுவார். | உயிர் மெய் எழுத்துக்கள் 14-12 சரியான அளவுடையதாக எழுதுவார். | உயிர் மெய் எழுத்துக்கள் 11-9 சரியான அளவுடையதாக எழுதுவார். | உயிர் மெய் எழுத்துக்கள் 8 இலும் குறைவான அளவுடையதாக எழுதுவார். |
| | 18.5.4 உரிய திசை முகத்துடன் இருத்தல் | உயிர் மெய் எழுத்துக்கள் 18-15 சரியான திசைமுகத்தை அனுசரித்து எழுதுவார். | உயிர் மெய் எழுத்துக்கள் 14-12 சரியான திசைமுகத்தை அனுசரித்து எழுதுவார். | உயிர் மெய் எழுத்துக்கள் 11-9 சரியான திசைமுகத்தை அனுசரித்து எழுதுவார். | உயிர் மெய் எழுத்துக்கள் 8 இலும் குறைவாக திசைமுகத்தை அனுசரித்து எழுதுவார். |

**செயற்பாடு 18.3, 18.4, 18.6, 18.7, 18.8 எழுத்துக்கள் சேர்த்து வாசிப்போம், எழுதுவோம்.**

**படிமுறை : 01**

- நான்கு கோட்டில் (டா, பா, யா, மா ..... )நடுப் பகுதி எழுத்துக்களை எழுதுதவும் வாசிக்கவும் அறிமுகஞ் செய்த பின்னர் அவ்வெழுத்துக்கள் அடங்கியுள்ள சொற்களை நான்கு கோட்டில் எழுதவும் வாசிக்கவும் மாணவரை வழிப்படுத்துங்கள்.

டா பா யா மா

சா கா ஙா

வா லா ளா னா ணா

- அவ்வாறு அறிமுகஞ் செய்யப்பட்ட ஒவ்வோர் எழுத்தைம் பயன்படுத்தி பொருளுள்ள சொற்கள் நான்கு கோட்டில் எழுதவும் வாசிக்கவும் மாணவரை வழிப்படுத்துங்கள்.
- சொற்களைப் பார்த்து எழுதும் பயிற்சிகளின் பின்னர், செவிமடுத்து எழுதும் பயிற்சிகளிலும் மாணவரை ஈடுபடுத்துங்கள்.
- அதற்காக நான்கு கோட்டுப் புத்தகமொன்று பயன்படுத்த வழிப்படுத்துங்கள்.
- சொற்கள் எழுதும்வேளையில் எழுத்துக்களுக்கு இடையே உரியவாறு இடைவெளிவிட்டு எழுதுமாறு அறிவுறுத்துங்கள்.
- இதற்காக சுண்ணாப்பலகைகளில் காட்சிப்பலகையில் எழுதுவதற்கு இடையே உரியவாறு இடைவெளி விடும் விதத்தைச் செய்துகாட்டுங்கள்.
- பின்னர் **எழுத்தை அறிவோம் - 3** நூலில் உள்ள நான்கு கோட்டின் மீது சொற்களை எழுதும் பயிற்சியும் பின்னர் பார்த்து எழுதும் பயிற்சிகளிலும் மாணவரை ஈடுபடுத்துங்கள்.
- சொற்களைச் செவிமடுத்து எழுதுவதற்காக நான்கு கோட்டுப் கொப்பியொன்றைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்துங்கள்.
- பின்னர், ஏற்கனவே கற்றுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்திச் சொற்கள் அமைக்கும் பயிற்சிகளில் மாணவரை ஈடுபடுத்துங்கள்.
- இதுவரை கற்றுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி, ஈரெழுத்து, மூவெழுத்துச் சொற்களை நான்கு கோட்டில் எழுத வழிப்படுத்துங்கள்.
- அதற்காக நான்கு கோட்டுப் கொப்பியொன்றைப் பயன்படுத்த வழிபபடுத்துங்கள்.
- மாணவர்கள் செயற்பாடுகளில் ஈடுபடும் வேளையில் ஒவ்வொரு மாணவரதும் அருகில் சென்று, அவர்களை சொற்கள் எழுதும் விதம் குறித்துக் கவனஞ் செலுத்துங்கள்.

- மாணவர் ஒவ்வொருவரதும் பயிற்சிப் பத்தகங்களைப் பரிசீலிக்கும் வேளையில், எழுத்துக்கள் சரியாக எழுதப்பட்டுள்ளனவா எனக் கவனித்து, தவறுகள் இருப்பின் அவற்றைத் திருத்தி எழுத அவர்களுக்கு உதவி புரியுங்கள்.
- இவ்வாறாக மீதியாக உள்ள நடுக் கீழ்ப் பகுதி எழுத்துக்கமையும் அறிமுகஞ் செய்யுங்கள்.
- அவ்வெழுத்துக்களை அறிமுகஞ் செய்த பின்னர், அவ்வெழுத்துக்கள் அடங்கி சொற்களை எழுதவும் வாசிக்கவும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- சொற்களை வாசிக்கும் போது எழுத:தக்களின் ஒலியைச் சரியாக உச்சரிக்க மாணவர்க்குப் பயிற்சியளியுங்கள்.
- மாணவரை இரண்டு குழுக்களாக அல்லது பொருத்தமானவாறு சிறுகுழுக்களாக அல்லது இருவரிருவராகப் பிரியுங்கள்.
- ஒரு குழு அல்லது இருவருள் ஒருவர் சொல்லட்டை ஒன்றினைக் காட்சிப்படுத்துமாறும் மற்றைய குழுவுக்கு அல்லது இருவருள் மற்றைவருக்குச் சொல்லட்டையை வாசிக்குமாறும் வழிப்படுத்துக.
- இதனை ஒரு விளையாட்டு போன்று நடத்தலாம்.
- சொற்கள் வாசிப்பதற்காக, வீதியோரங்களிலும் செல்லும் இடங்கில் கட்சிப்படுதப்பட்டுள்ள பெயர்ப்பலகைகளை வாசிக்குமாறு அறிவுறுத்தல் வழங்குங்கள்.
- அக்காட்சிப் பலகையில் கண்ட சொற்கள் யாவை என மாணவரிடம் வினவுங்கள்.
- நான்கு கோட்டில் சொற்கள் எழுதுவதையும் வாசிப்பதையும் அறிமுகஞ் செய்த அதே முறையைக் கையாண்டு தனிக்கோட்டில் சொற்களை எழுதவும் அவற்றை வாசிக்கவும் வழிப்படுத்துங்கள்.
- சொற்களைப் பார்த்து தனிக்கோட்டில் எழுதுவதற்காக **எழுத்தை அறிவோம் - 3** நூலில் உள்ள பயிற்சிகளில் மாணவரை ஈடுபடுத்துங்கள்.
- சொற்களைப் பார்த்து எழுதுவதற்காக தனிக்கோட்டுப் புத்தகமொன்றை பயன்படுத்துமாறு அறிவுறுத்துங்கள்.
- தனிக்கோட்டில் சொற்கள் அமைப்பதற்காக, தனிக்கோட்டுப் புத்தகமொன்றை பயன்படுத்துமாறு அறிவுறுத்துங்கள்.
- சொற்கள் அமைக்கும்போது ஏற்கனவே கற்றுள்ள எழுத்துக்களடங்கிய சொற்கள் அமைத்து எழுதவதற்கும் அவற்றை வாசிப்பதற்கும் மாணவர்க்குச் சந்தர்ப்பமளியுங்கள்.

**கணிப்பிடு :**

| **செயலடைவு நியமம்** | **கணிப்பீட்டு நியதிகள்** | **பாண்டித்தியம் அடைந்துள்ளார்.** | | **பாண்டித்தியத்திற்குத் தொலைவில் உள்ளார்.** | |
|---|---|---|---|---|---|
| | | 4 | 3 | 2 | 1 |
| 18.3 விதந்துரைக் கப்பட்ட உயிர் மெய் எழுத்துக்கள் ஈரெழுத்து, மூவெழுத்துச் சொற்கள் இரண்டு வீதம் பொறிமுறைத் திறன்களை வெளிப்படுத்தி நான்கு கோட்டில் எழுதுவார். | 18.3.1 உறுப்பமைய இருத்தல் | எழுத்துக்களின் உரிய உறுப்பமைய நான்கு சொற்களையும் எழுதுவார். | எழுத்துக்களின் உரிய உறுப்பமைய மூன்று சொற்களை யும் எழுதுவார். | எழுத்துக்களின் உரிய உறுப்பமைய இரண்டு சொற்களையும் எழுதுவார். | எழுத்துக்களின் உரிய உறுப்பமைய ஒரு சொல்லை எழுதுவார். |
| | 18.3.2 உரிய அமைப்புடன் இருத்தல் | எழுத்துக்களின் சரியான வடிவத்தில் நான்கு சொற்களையும் எழுதுவார். | எழுத்துக்களின் சரியான வடிவத்தில் மூன்று சொற்களையும் எழுதுவார். | எழுத்துக்களின் சரியான வடிவத்தில் இரண்டு சொற்களையும் எழுதுவார். | எழுத்துக்களின் சரியான வடிவத்தில் ஒரு சொல்லை எழுதுவார். |
| | 18.3.3 உரிய அளவுடன் இருத்தல் | எழுத்துக்களின் சரியான அளவு பற்றி கவனஞ் செலுத்தி நான்கு சொற்களையும் எழுதுவார். | எழுத்துக்களின் சரியான அளவு பற்றி கவனஞ் செலுத்தி மூன்று சொற்களையும் எழுதுவார். | எழுத்துக்களின் சரியான அளவு பற்றி கவனஞ் செலுத்தி இரண்டு சொற்களையும் எழுதுவார். | எழுத்துக்களின் சரியான அளவு பற்றி கவனஞ் செலுத்தி ஒரு சொல்லை எழுதுவார். |
| | 18.3.4 உரிய திசை முகத்துடன் இருத்தல் | எழுத்துக்கள் எழுதுவதன் சரியான திசைமுகத்தை அனுசரித்து நான்கு சொற்களையும் எழுதுவார். | எழுத்துக்கள் எழுதுவதன் சரியான திசைமுகத்தை அனுசரித்து மூன்று சொற்களையும் எழுதுவார். | எழுத்துக்கள் எழுதுவதன் சரியான திசைமுகத்தை அனுசரித்து இரண்டு சொற்களையும் எழுதுவார். | எழுத்துக்கள் எழுதுவதன் சரியான திசைமுகத்தை அனுசரித்து ஒரு சொல்லை எழுதுவார். |
| | 18.3.5 சொற் களிலுள்ள எழுத்துக் களுக் கிடையில் உரிய இடைவெளி காணப் படல். | எழுத்துக்களுக்கு இடையே சரியான இடைவெளி விட்டு நான்கு சொற்களையும் எழுதுவார். | எழுத்துக்களுக்கு இடையே சரியான இடைவெளி விட்டு மூன்று சொற்களையும் எழுதுவார். | எழுத்துக்களுக்கு இடையே சரியான இடைவெளி விட்டு இரண்டு சொற்களையும் எழுதுவார். | எழுத்துக்களுக்கு இடையே சரியான இடைவெளி விட்டு ஒரு சொல்லை எழுதுவார். |

| செயலடைவு நியமம் | கணிப்பீட்டு நியதிகள் | பாண்டித்தியம் அடைந்துள்ளார். | | பாண்டித்தியத்திற்குத் தொலைவில் உள்ளார். | |
|---|---|---|---|---|---|
| | | 4 | 3 | 2 | 1 |
| 18.4 நான்கு கோட்டில் எழுதிய நான்கு சொற்களை சரியான உச்சரிப்புடன் உரத்து வாசிப்பார். | 18.4.1 சரியானதாக இருத்தல் | நான்கு சொற்களையும் சரயாக உச்சரித்து உரத்து வாசிப்பார். | மூன்று சொற்களையும் சரயாக உச்சரித்து உரத்து வாசிப்பார். | இரண்டு சொற்களையும் சரயாக உச்சரித்து உரத்து வாசிப்பார். | ஒரு சொல்லை சரியாக உச்சரித்து உரத்து வாசிப்பார். |
| 18.6 விதந்துரைக் கப்பட்ட உயிர் மெய் எழுத்- துக்களைக் கொண்டு ஈரெழுத்து, மூவெழுத்துச் சொற்கள் இரண்டு வீதம் பொறிமுறைத் திறன்களை வெளிப்படுத்தி தனிக் கோட்டில் எழுதுதல் | 18.6.1 உறுப்பமைய இருத்தல் | எழுத்துக்களின் உறுப்பமைய நான்கு சொற்களையும் எழுதுவார். | எழுத்துக்களின் உறுப்பமைய மூன்று சொற்களையும் எழுதுவார். | எழுத்துக்களின் உறுப்பமைய இரண்டு சொற்களையும் எழுதுவார். | எழுத்துக்களின் உறுப்பமைய ஒரு சொல்லை எழுதுவார். |
| | 18.6.2 உரிய அமைப்புடன் இருத்தல் | எழுத்துக்களின் சரியான வடிவத்தில் நான்கு சொற்களையும் எழுதுவார். | எழுத்துக்களின் சரியான வடிவத்தில் மூன்று சொற்களையும் எழுதுவார். | எழுத்துக்களின் சரியான வடிவத்தில் இரண்டு சொற்களையும் எழுதுவார். | எழுத்துக்களின் சரியான வடிவத்தில் ஒரு சொல்லை எழுதுவார். |
| | 18.6.3 உரிய அளவுடன் இருத்தல் | எழுத்துக்களின் சரியான அளவைக் கவனத்திற் கொண்டு நான்கு சொற்களையும் எழுதுவார். | எழுத்துக்களின் சரியான அளவைக் கவனத்திற் கொண்டு மூன்று சொற்களையும் எழுதுவார். | எழுத்துக்களின் சரியான அளவைக் கவனத்திற் கொண்டு இரண்டு சொற்களையும் எழுதுவார். | எழுத்துக்களின் சரியான அளவைக் கவனத்திற் கொண்டு ஒரு சொல்லை எழுதுவார். |
| | 18.6.4 உரிய திசை முகத்துடன் இருத்தல் | எழுத்து எழுதுவதன் சரியான திசையை அனுசரித்து நான்கு சொற்களையும் எழுதுவார். | எழுத்து எழுதுவதன் சரியான திசையை அனுசரித்து மூன்று சொற்களையும் எழுதுவார். | எழுத்து எழுதுவதன் சரியான திசையை அனுசரித்து இரண்டு சொற்களையும் எழுதுவார். | எழுத்து எழுதுவதன் சரியான திசையை அனுசரித்து ஒரு சொல்லை எழுதுவார். |

| செயலடைவு நியமம் | கணிப்பீட்டு நியதிகள் | பாண்டித்தியம் அடைந்துள்ளார். | | பாண்டித்தியத்திற்குத் தொலைவில் உள்ளார். | |
|---|---|---|---|---|---|
| | | 4 | 3 | 2 | 1 |
